**இன்றைய வேளாண் செய்திகள்**

**06.07.2013**

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் சனிக்கிழமை (ஜூலை 6) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை காரணமாக மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கோவை, நீலகிரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தேனி மாவட்டங்களில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

சின்னக் கல்லாறு, வால்பாறை, சேந்தமங்கலம், நீலகிரி, பொள்ளாச்சி, நாமக்கல், பெரியாறு அணை, செங்கோட்டை, விழுப்புரம், சிவகங்கை, கிருஷ்ணகிரி உள்ளிட்ட இடங்களில் வியாழக்கிழமை மாலையிலிருந்து பலத்த மழை பெய்து வருகிறது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் சனிக்கிழமை மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும்.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

வால்பாறை - 40, நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு - 30, நீலகிரி மாவட்டம் தேவாலா, நடுவட்டம், விருத்தாசலம், பெரியாறு அணை - 20, பொள்ளாச்சி, விழுப்புரம் மாவட்டம் மயிலம், செங்கோட்டை, சிவகங்கை, ஒசூர், நீலகிரி மாவட்டம் கூடலூர் - 10.

**16 ஆண்டுகளில் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை**

காங்கிரஸ், பா.ஜ.க. அரசுகளின் தவறான கொள்கைகளால் கடந்த 16 ஆண்டுகளில் நாட்டில் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அகில இந்திய விவசாயிகள் சங்கத் துணைத் தலைவர் அசோக் தாவ்லே தெரிவித்தார்.

கடலூரில் கடந்த ஜூன் 24-27-ஆம் தேதி வரை நடந்த அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-வது மாநாடு குறித்த விளக்கக் கூட்டம் கும்மிடிப்பூண்டியில் புதன்கிழமை நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.ரவிக்குமார் தலைமை வகித்தார்.

மாவட்டத் தலைவர் எஸ்.எம்.ஹனீப், செயலாளர் துளசி நாராயணன், பொருளாளர் ஜி.சம்பத், எம்.சிவக்குமார் உள்ளிட்டோர் பேசினர். இதில், அகில இந்திய விவசாயிகள் சங்கத் துணைத் தலைவர் அசோக் தாவ்லே பேசியது:

விவசாயிகளுக்கு உரம், விதை, இயந்திரம் போன்றவற்றை வழங்க மத்திய அரசு தவறியதால், தனியாரிடம் அவற்றை வாங்கும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு கடனாளிகளாக உள்ளனர்.

இந்நிலையில் அதிக மின்வெட்டு, விளை பொருள்களுக்கு உரிய விலை கிடைக்காதது போன்றவற்றால் விவசாயம் செய்வதற்கு விவசாயிகள் பயப்படும் சூழல் உருவாகி உள்ளது.

மேலும், தனியார் மயம், தாராளமயம், உலகமயம் போன்ற மத்திய அரசின் கொள்கைகளால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பன்னாட்டு நிறுவனங்களை இந்தியாவில் அனுமதித்துள்ள மத்திய அரசின் தவறான முடி விவசாயிகளைத் தற்கொலைக்குத் தள்ளிவிட்டது. மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. அரசின் தவறான கொள்கைகளால் கடந்த 16 ஆண்டுகளில் மட்டும் நாட்டில் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

மத்தியில் ஆட்சி செய்யும் அரசுகள் விவசாயத்தைக் காக்க வேண்டும், விவசாயிகள் நலனில் அக்கறை கொள்ள வேண்டும் என்றில்லாமல் பெரும் பணக்காரர்களுக்கும், அன்னிய நிறுவனங்களுக்கும் பாதுகாப்பாக உள்ளது என்றார்.

**கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க உத்தரவிட வேண்டும்**

கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடுமாறு அந்த மாநில அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில நிர்வாகிகள், மாவட்டச் செயலர்கள் கூட்டம் மதுரையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாநில துணைத் தலைவர் கே. முகமது அலி தலைமை வகித்தார். மாநிலப் பொதுச்செயலர் பெ. சண்முகம், பொருளாளர் நாகப்பன், மாவட்டச் செயலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கர்நாடகத்தில் காவிரிப் படுகையில் நல்ல மழை பெய்து அணைகள் நிரம்பி வழிகின்றன. வழிந்தோடும் நீர்தான் மேட்டூர் அணைக்கு வந்துள்ளது. உச்ச நீதிமன்றத்திலும், காவிரி மேற்பார்வைக் குழு கூட்டத்திலும் தமிழத்துக்குத் தண்ணீர் தரமுடியாது என கர்நாடக அரசு கூறியிருப்பது கண்டனத்துக்குரியது.

பற்றாக்குறை காலத்திலேயே நீரைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனக் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அணைகள் நிரம்பி

வழியும் நிலையிலும் தண்ணீர் திறந்துவிட முடியாது எனக் கூறுவது காவிரி மீதான தமிழகத்தின் உரிமையை மறுப்பதாகும்.

கர்நாடக மாநில அரசின் இத்தகைய அடாவடித்தனத்தை காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது, தமிழக விவசாயிகள் மீது அக் கட்சிக்கு அக்கறையின்மையைக் காட்டுகிறது.

கடந்த ஆண்டு குறுவை, சம்பா சாகுபடி முற்றிலும் இல்லாமல் பெரும் இழப்புக்கு விவசாயிகள் ஆளாகி மீளமுடியாத நிலையில் இருக்கின்றனர்.

ஆகவே, தமிழகத்துக்குரிய தண்ணீரைத் திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு மத்திய அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். தமிழக அரசு கோரியுள்ள ரூ.20 ஆயிரம் கோடி வறட்சி நிதியை மத்திய அரசு உடனே வழங்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள தனியார் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கரும்புக்கான தொகை ரூ.400 கோடியை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். 6 மாதங்களாக இத்தொகை நிலுவையில் உள்ளது.

இது குறித்து ஆலை நிர்வாகங்கள், ஆட்சியர்களிடம் முறையிட்டும் நடவடிக்கை இல்லை. அதோடு, வங்கிக் கடனுக்கான தொகையை ஆலை நிர்வாகங்கள் விவசாயிகளிடம் பிடித்தம் செய்து வங்கிகளில் செலுத்தவில்லை. இதனால் விவசாயிகள் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்விஷயத்தில் முதல்வர் ஜெயலலிதா தலையிட்டு கரும்புக்கான நிலுவைத் தொகை விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இருபோக சாகுபடிக்கு தண்ணீர் திறக்க கோரிக்கை**

பெரியாறு-வைகை அணைகளில் 4 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் இருப்பு இருந்தால் கள்ளந்திரி மதகு வரை இருபோகச் சாகுபடி நிலங்களுக்கு தண்ணீர்

திறக்கப்படும். தற்போது இரு அணைகளிலும் சேர்த்து வெள்ளிக்கிழமை காலை 4,594 மில்லியன் கனஅடி நீர் நிறைந்துள்ளது. எனவே இருபோக சாகுபடிப் பகுதிக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சிவகங்கையில் பலத்த மழை**

சிவகங்கையில் வெள்ளிக்கிழமை மாலை பலத்த மழை பெய்தது.

தென்மேற்கு பருவமழைக் காலம் துவங்கியதைத் தொடர்ந்து சிவகங்கையில் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் பலத்த மழை பெய்யத் துவங்கியது. சுமார் 30 நிமிடங்களுக்கும் மேல் நீடித்த மழை காரணமாக இருள் சூழ்ந்த நிலை காணப்பட்டது. இதனால் சாலையில் சென்ற வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரியவிட்டுச் சென்றன. மழையின் காரணமாக சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல ஓடியது. இரண்டு நாள்களுக்கு ஒருமுறை இப்பகுதியில் மழை பெய்து வருவதால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**பவானிசாகர் நீர்மட்டம் 62.04 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 62.04 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 3,636 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,100 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 7.93 டி.எம்.சி.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

கோவை மாநகராட்சியில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கோவை மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து இப்பேரணியைக் கொடியசைத்துத் துவக்கி வைத்தார் மேயர் செ.ம.வேலுசாமி. அப்போது அவர் பேசியது:

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முதல்முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது இயற்கை வளங்களைக் காக்கும் வகையில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை அறிவித்து, ஊராட்சி முதல் மாநகர் வரை மக்கள் விழிப்புணர்வு பெறும் வகையில் சிறப்பாகச் செயல்படுத்தினார். நாட்டில் தொழில் மற்றும் இதர துறைகளில் வளர்ச்சி அதிகரித்துவருகிறது. அதேபோல மக்களின் தேவையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மனித குலத்திற்கு, எதிர்காலச் சந்ததியினர் நல்வாழ்வு வாழ்வதற்கு இயற்கை வளங்களைக் காக்க வேண்டும்.

குறிப்பாக மரங்கள் நடுதல் மற்றும் மழைநீரைப் பாதுகாத்தல் போன்றவை தற்போது மிகவும் இன்றியமையாதவையாக உள்ளன. எனவே மழைநீர் சேகரிப்பு திட்டத்தை மக்கள் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்று மேயர் தெரிவித்தார்.

மாநகராட்சி ஆணையர் க.லதா, வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி, சட்டப்பேரவை உறுப்பினர் சேலஞ்சர் துரை, துணை மேயர் லீலாவதி உண்ணி, மண்டலத் தலைவர்கள் கே.ஆர்.ஜெயராம், எம்.பெருமாள்சாமி, பி.சாவித்திரி, கே.ஏ.ஆதிநாராயணன், கொடிசியா தலைவர் ராமசந்திரன், சிறுதுளி தலைவர் வனிதா மோகன், ராக் செயலாளர் ரவீந்திரன், கோப்மா தலைவர் மணிராஜ், டேக்ட் மாவட்டத் தலைவர் ஜேம்ஸ். இந்திய தொழில் வர்த்தக சபைத் தலைவர் ஆர்.ஆர்.பாலசுந்தரம், டேப்மா தலைவர் செப்ந்திரராஜன் மற்றும் மாணவ மாணவியர் பேரணியில் பங்கேற்றனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு**

செய்யாறு கோட்டாட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஜுலை 5) நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஜுலை 12-லல் நடைபெற உள்ளது.

இதில் செய்யாறு கோட்டத்துக்கு உள்பட்ட செய்யாறு, வந்தவாசி, ஆரணி ஆகிய வட்டத்தைச் சேர்ந்த விவசாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்று தங்களின் குறைகளை தெரிவித்து தீர்வு பெறலாம்.

மற்ற வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜூலை 19ஆம் நடைபெறும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**ஒகேனக்கல்லில் இன்றுநீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு**

கபினி அணையில் வியாழக்கிழமை திறந்துவிடப்பட்ட தண்ணீர், தமிழக எல்லையான பிலிகுண்டுலுவிக்கு சனிக்கிழமை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கர்நாடக மாநிலத்தில் பெய்யும் தொடர் மழையால், கபினி அணையிலிருந்து வியாழக்கிழமை நொடிக்கு 50,000 கன அடி தண்ணீர் காவிரி ஆற்றில் திறந்துவிடப்பட்டது.

இந்த தண்ணீர், தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு சனிக்கிழமை வந்தடையும் என எதிர்பார்ப்பதாக தேசிய நதிநீர் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன. வெள்ளிக்கிழமை நீர்வரத்து 5,000 கன அடிக்கும் குறைவாக இருந்தது.

கபினி அணையிலிருந்து அதிக அளவில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதை அடுத்து, ஒகேனக்கல் அருவியில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

காவிரி ஆற்றில் வெள்ளிக்கிழமை நீர்வரத்து குறைவாக இருந்த நிலையில், ஒகேனக்கல்லுக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் பிரதான நீர்வீழ்ச்சியில் குளித்து மகிழ்ந்தனர்.

**நாமக்கல் மாவட்டத்தில் மழை பெய்ய வாய்ப்பு**

நாமக்கல் மாவட்டத்தில் நிலவும் வானிலை அடிப்படையில் மாவட்டம் முழுவதும் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (ஜூலை 6 முதல் ஜூலை 9 வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் சில இடங்களில் 4 மிமீ முதல் 5 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்றின் திசைவேகம் மணிக்கு 5 கிமீ முதல் 6 கிமீ வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 75.2 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 95 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 38 சதம் முதல் அதிகபட்சம் 76 சதம் வரையும் இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..:

நிலவும் வானிலை அடிப்படையில் மாவட்டம் முழுவதும் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழிகளிடையே தீவன எடுப்பு இயல்பான அளவுகளில் இருக்கும். காற்றின் வேகம் மிதமாக காணப்பட்டாலும் பக்கவாட்டில் தடுப்பு படுதாவைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். சூரியகாந்தி, மக்காச்சோளம் ஆகியவற்றை பூஞ்சான நச்சுப் பரிசோதனை செய்த பிறகே, பயன்படுத்த வேண்டும்.

கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் மேல் மூச்சுக்குழல், ஈகோலை மற்றும் சிஆர்டி நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. மேலும், ஆய்வு செய்யப்பட்ட தண்ணீரில் நோய்க் கிருமிகளின் தாக்கம் அதிகமாகவும் உள்ளது. எனவே, பண்ணையாளர்கள் மழைக் காலம் தொடங்க உள்ளதால் குடிநீரை ஆய்வகத்தில்

பரிசோதனை செய்து அதற்கேற்ப கிருமிநாசினி கலந்தும், பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடிக்கவும் வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..:

ஓரளவு நீர்ப்பாசன வசதியுள்ள விவசாயிகள் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய தீவனச் சோளம், கோஎஃப்எஸ்-29 ரகத்தை விதைப்பு செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 2 கிலோ விதை போதுமானது. இதற்கு 10 முதல் 15 நாள்கள் இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்தால் போதும். நடவு செய்த 70 முதல் 75 நாள்களில் அறுவடை செய்யலாம். மேலும். மறுதாம்புப் பயிராக 60 நாள்கள் இடைவெளியில் தொடர்ந்து மூன்று வருடங்கள் அறுவடை செய்யலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிவப்பு நெல்லிக்காய் விளைச்சல் அதிகரிப்பு**

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் சிவப்பு நெல்லிக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதை அடுத்து, அங்குள்ள வாரச் சந்தைக்கு நெல்லிக்காய் வரத்தும் அதிகரித்துள்ளது.

குளிர்ச்சி மிகுந்த மலைப் பிரதேசங்களில் சாகுபடி செய்யக்கூடிய சிவப்பு நெல்லிக்காய் தற்போது நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையிலும் பயிரிடப்படுகிறது.

அங்குள்ள வாழவந்திநாடு ஊராட்சி, எல்லைக்கிராய்பட்டி கிராம விவசாயத் தோட்டங்களில் இந்த சிவப்பு நெல்லிக்காய் ஊடுபயிராக பயிரிடப்பட்டு வருகின்றன.

சர்க்கரை நோயை குணப்படுத்த வல்ல இந்த சிவப்பு நெல்லிக்காய், சிவப்பு நிறத்தில் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் அதன் சுவை உவர்ப்புத் தன்மையுடையதாகும். ஆண்டுக்கு இரு முறை காய் காய்க்கும் இந்த சிவப்பு நெல்லிக்காய் செடிகளில் தற்போது அதிகளவில் காய்பிடித்துள்ளன.  250 கிராம் (1/4 கிலோ) ரூ.10 என்ற விலையில் விற்பனை செய்யப்படும் இந்த

நெல்லிக்காய்களை சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

இதுகுறித்து, விவசாயி அர்ஜுணன் கூறியது:

சிவப்பு நெல்லிக்காய் விதையை கேரளத்திலிருந்து வாங்கி வந்து பயிரிட்டுள்ளோம். கடந்தாண்டைவிட இந்த ஆண்டு விளைச்சல் அதிகரித்துள்ளது. சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் குணம் கொண்ட இந்த நெல்லிக்காயை சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். கொல்லிமலை எல்லைக்கிராய்பட்டியில் மட்டுமே சிவப்பு நெல்லிக்காய் விளைவிக்கப்படுகிறது என்றார் அவர்.

**நாமக்கல்லில் நடைபெற்ற பருத்தி ஏலத்துக்கு வரப்பெற்றிருந்த பருத்தி மூட்டைகள்.**

நாமக்கல் வேளாண் கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ஆயிரம் மூட்டை பருத்திகள் ரூ.18 லட்சத்துக்கு விற்பனையாகின.

வாரந்தோறும் வியாழக்கிழமை நடைபெற்ற இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல் மட்டுமின்றி அருகே சேலம், துறையூர், தொட்டியம் உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும் விவசாயிகள் பருத்தி மூட்டைகள் கொண்டு வருகின்றனர்.

இதன்படி, இந்த வாரம் வியாழக்கிழமை (ஜூலை 4) நடைபெற்ற ஏலத்துக்கு சுமார் 1000 மூட்டை பருத்திகள் வரப்பெற்றிருந்தன. அவற்றில் ஆர்சிஹெச் ரக பருத்திகள் குவிண்டால் ரூ.4800 முதல் ரூ.5351 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.4850 முதல் ரூ.5500 வரையும், சுரபி ரக்ம ரூ.5500 முதல் ரூ.6035 வரையும் ஏலம் போயின. அதன்படி, மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.18 லட்சத்துக்கு விற்பனையானதாக கூட்டுறவு விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் ஜூன் 27ஆம் தேதி நடைபெற்ற ஏலத்துக்கு வரப்பெற்ற 600 மூட்டை பருத்திகள் ரூ.11 லட்சத்துக்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்ய வலியுறுத்தல்**

தமிழகத்தில் உள்ள விவசாயிகள் வங்கிகளில் பெற்றுள்ள கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் ஆண்டுதோறும் ஜூலை 5-ஆம் தேதி உழவர் தின பேரணி நடைபெறுவது வழக்கம்.

இந்த ஆண்டு கிருஷ்ணகிரியில் வெள்ளிக்கிழமை மாநில அளவிலான உழவர் தின பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழகம் முழுவதிலும் இருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பேரணி மற்றும் பொதுக்கூட்டத்திற்கு தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் கே.எம்.ராமகவுண்டர் வரவேற்றுப் பேசினார். மாநிலப் பொருளாளர் பட்டணம் ராமசாமி கவுண்டர் முன்னிலை வகித்தார். பேரணியை இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் தெய்வசிகாமணி தொடக்கிவைத்தார்.

பேரணி எல்.ஐ.சி. அலுவலகம் அருகே தொடங்கி கிளை சிறைச்சாலை சாலை வழியாக பொதுக்கூட்டம் மேடையை வந்தடைந்தது.

பொதுக்கூட்டத்தில் மாநிலத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி பேசியது:

தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தால் விவசாய உற்பத்தி குறைந்து வருகிறது. இதனால், அரிசி, பருப்பு, காய்கறி விலை உயர்ந்து கொண்டே செல்கிறது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை விவசாயத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் வரலாறு காணாத வறட்சி நிலவுவதால், மத்திய அரசு பேரிடர் நிதியில் இருந்து விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டும். யானை உள்ளிட்ட வனவிலங்குகளால் ஏற்படும் உயிர்ச் சேதத்திற்கு ரூ.10 லட்சமும், பயிர் சேதத்திற்கு ரூ.50 ஆயிரமும் இழப்பீடு வழங்க வேண்டும்.

மேலும், பயிர் சேதம் செய்யும் விலங்குகளையும், பறவைகளையும் சுடுவதற்கு மத்திய, மாநில அரசுகள் அனுமதி வழங்க வேண்டும். தொடர் வறட்சியால் தமிழகத்தில் விவசாயிகள் தாங்கள் வாங்கிய விவசாயக் கடன்களை திருப்பிச் செலுத்த  முடியாமல் உள்ளனர். எனவே, தேசிய மற்றும் கூட்டுறவு வங்கிகளில் அவர்கள் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நடந்த கூட்டுறவுத் தேர்தலை ரத்து செய்ய வேண்டும். மின்வெட்டை நீக்கி பகலில் 6 மணி நேரம், இரவில் 8 மணி நேரம் என விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி மாநிலத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி பேசினார்.

பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தில் கர்நாடக மாநில விவசாயிகள் சங்கத் தலைவர் சந்திரசேகர், மஞ்சள் விவசாயிகள் சங்க தேசிய துணைத் தலைவர் நரசிம்ம நாயுடு, மஞ்சள் விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் காசியண்ண கவுண்டர், ஆந்திரா மாநில விவசாயிகள் சங்கத் தலைவர் செங்கால்ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

கூட்டத்தில் விருதுநகர் மாவட்டத் தலைவர் ரெங்குதாஸ், வேலூர் மாவட்டத் தலைவர் லோகநாதன், நெல்லை மாவட்டத் தலைவர் மாரிசாமி, தஞ்சை மாவட்டத் தலைவர் கண்ணன் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**நெல் வயல்வெளிப் பள்ளி பயிற்சி நிறைவு விழா**

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அருகே அட்மா திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு நெல் வயல்வெளிப் பள்ளி குறித்த பயிற்சி நிறைவு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சிவம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு ஊராட்சித் தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார்.

மத்தூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் த.ரவீந்தர் விழாவில் பங்கேற்று, விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி குறித்த தொழில்நுட்பங்கள், நெல் பயிரில் அதிக பாதிப்பினை ஏற்படுத்தும் சாறு உறிஞ்சும் பூச்சிகள், தண்டு துளைப்பான் மற்றும் புகையான் போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறைகள் ஆகியவை குறித்து எடுத்துரைத்தார்.

ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மேலாண்மை குறித்து மத்தூர் வட்டா தொழில்நுட்ப மேலாளர் செல்வராஜ் கூறினார். வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து  துணை வேளாண் அலுவலர் சீனிவாசன் விளக்கினார்.

மேலும், மண் ஆய்வு செய்வதன் முக்கியதுவம் பற்றியும், கோனோவீடர் களைக் கருவியினைக் கொண்டு செயல் விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. விழாவில், பயிர் பாதுகாப்புக் குறித்த விவரக் கையேடு, இடுபொருள்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

அட்மா திட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் முகமது ரஃபி, முரளி மற்றும் விவசாயிகள் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

**ஆடிப்பட்டம்: தரமான விதைகளை விற்பனை செய்ய அறிவுறுத்தல்**

ஆடிப்பட்டத்தையொட்டி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தரமான விதைகளை விற்பனை செய்ய வேண்டும் என்று வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக கிருஷ்ணகிரி விதைப் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் எஸ்.ஜெகதீசன் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது நெல் நடவு செய்ய நாற்றாங்கல் தயார் செய்யும் பணியை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். எனவே, விதை விற்பனையாளர்கள் தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.

மேலும், விதை விற்பனையாளர்கள் தாங்கள் விற்பனை செய்யும் விதைக் குவியல்களின் தரமறிந்து விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். விதை உற்பத்தியாளர்கள் அல்லது மொத்த விற்பனையாளர்களிடமிருந்து விதைக் கொள்முதல் செய்யும் போது, விற்பனை பட்டியல்களுடன் விதை முளைப்புத் திறன் பகுப்பாய்வு அறிக்கையையும் கேட்டு சரிபார்க்க வேண்டும்.

பகுப்பாய்வு பெறப்படாத விதைக் குவியல்களிலிருந்து பணிவிதை மாதிரிகள் எடுத்து ஒரு பணி விதை மாதிரிக்கு பரிசோதனைக் கட்டணமாக ரூ.30 செலுத்து, கிருஷ்ணகிரியில் எண்.35, மோகன்ராவ் காலனியில் செயல்பட்டு வரும் விதைப் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி தர அறிக்கையை பரிசோதிக்கலாம்.

எனவே, விவசாயிகளுக்கு விதைக் குவியல்களின் தரமறிந்து நல்ல தரமான விதைகளை விற்பனை செய்யுமாறு விதை விற்பனையாளர்களை கேட்டுக் கொள்ளப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**10 நாள்களில் மேட்டூர் அணை நீர்மட்டம் 32 அடி உயர்வு**

கர்நாடகத்திலிருந்து வந்த உபரி நீரால் கடந்த 10 நாள்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 32 அடி உயர்ந்தது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் அங்குள்ள கபினி அணை நிரம்பியது. அந்த அணையின் பாதுகாப்பு கருதி, உபரி நீர் வெளியேற்றப்பட்டது.

இதனால், கடந்த மாதம் 25-ஆம் தேதி முதல் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

கடந்த 25-ஆம் தேதி 15.51 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம், வெள்ளிக்கிழமை 47.36 அடியாக உயர்ந்தது. கடந்த 10 நாள்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 31.85 அடி உயர்ந்துள்ளது.

அணைக்கு நொடிக்கு 6,233 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 1001 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 16.19 டி.எம்சியாக இருந்தது.

**"சொட்டுநீர் பாசனத்திற்கு விவசாயிகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்'**

சொட்டுநீர் பாசனத்திற்கு விவசாயிகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார் தமிழக அரசின் கண்காணிப்பு அலுவலரும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலருமான சந்தீப் சக்சேனா.

அரியலூர் அருகே உள்ள சோழமாதேவி ஊராட்சியில் உள்ள கிரீடு தொண்டு நிறுவன வளாகத்தில், வெள்ளிக்கிழமை நடைபெற்ற சொட்டுநீர் பாசன விழிப்புணர்வு முகாமில் பங்கேற்ற அவர் மேலும் பேசியது:

சொட்டுநீர் பாசன முறையில் 60 சதம் முதல் 80 சதம் வரை நீர் பயன்பாட்டுத் திறன் அதிகரிப்பதோடு, 20 சதம் முதல் 50 சதம் வரை அதிக விளைச்சல் கிடைக்கிறது.

உரப் பயன்பாடு திறன் இருமடங்கு அதிகரிப்பதால், ரசாயன உரத் தேவையில் 30 சதம் முதல் 45 சதம் வரை குறைய வாய்ப்புள்ளது.

சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சத மானியம், ரூ. 15 ஆயிரம் மதிப்பிலான உரம், அதை பாதுகாப்பதற்காக 20 தேக்கு மரங்கள், ரூ. 5 ஆயிரம் மதிப்புள்ள விதைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் துவரை, பச்சைப்பயறு போன்ற தானிய பயிர்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

எனவே, இதுபோன்ற கருத்தரங்குகளில் விவசாயிகள் பங்கேற்று, ஒருங்கிணைந்த விவசாய மேம்பாடு அடைய வேண்டும் என்றார் அவர்.

இந்தக் கருத்தரங்கிற்கு மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார் முன்னிலை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் அ. கருப்பசாமி, வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன், துணை இயக்குநர் (தோட்டக்கலை) சுப்பையா உள்பட கிரீடு நிறுவன அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**"நவீன வேளாண் கருவிகளால் உற்பத்தி அதிகரிக்கும்**

நவீன வேளாண் கருவிகளை கையாள்வதன் மூலமாக உற்பத்தி திறனை அதிகரிக்க முடியும் என்றார் தூத்துக்குடி மாவட்ட நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் நடராஜன்.

ஓட்டப்பிடாரம் அருகே உள்ள முத்துகுமாரபுரத்தில் நடைபெற்ற நபார்டு உழவர் மன்ற தொடக்க விழாவில் அவர் பேசியதாவது:

இம் மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் உற்பத்தி செலவுகள் கூடிவிட்ட போதிலும், விளை பொருள்களை சந்தை பயன்படுத்தும்போது சரியான விலை கிடைப்பதில்லை. எனவே, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாகமும், நவீன வேளாண் கருவிகளை கையாள்வது மூலமாகவும் உற்பத்தி திறனை அதிகரிக்க முடியும் என்றார்.

முள்ளூர் ஊராட்சித் தலைவர் தமிழ்செல்வி ராமசாமி,  முத்துகுமாரபுரம் நபார்டு உழவர் மன்றத் தலைவர் லிங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உதவிப் பொது மேலாளர் தாமோதரன், வேடநத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிச் செயலர் சேசுராஜ், வெங்கடாசலபுரம் நபார்டு உழவர் மன்றத் தலைவர் கனகராஜ், ஆதனூர் வீரபாண்டிய கட்டபொம்மன் நபார்டு உழவர் மன்றத் தலைவர் செல்வபொம்முதுரை, ஆதனூர் கிராமிய கலைக் குழுத் தலைவர் பிரகலாதன், தூத்துக்குடி மாவட்ட நபார்டு உழவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் சண்முகமல்லுச்சாமி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் சனிக்கிழமை (ஜூலை 6) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை காரணமாக மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கோவை, நீலகிரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தேனி மாவட்டங்களில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

சின்னக் கல்லாறு, வால்பாறை, சேந்தமங்கலம், நீலகிரி, பொள்ளாச்சி, நாமக்கல், பெரியாறு அணை, செங்கோட்டை, விழுப்புரம், சிவகங்கை, கிருஷ்ணகிரி உள்ளிட்ட இடங்களில் வியாழக்கிழமை மாலையிலிருந்து பலத்த மழை பெய்து வருகிறது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் சனிக்கிழமை மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும்.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

வால்பாறை - 40, நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு - 30, நீலகிரி மாவட்டம் தேவாலா, நடுவட்டம், விருத்தாசலம், பெரியாறு அணை - 20, பொள்ளாச்சி, விழுப்புரம் மாவட்டம் மயிலம், செங்கோட்டை, சிவகங்கை, ஒசூர், நீலகிரி மாவட்டம் கூடலூர் - 10.

**கபினி அணையிலிருந்து 35 ஆயிரம் கன அடி நீர் திறப்பு: காவிரியில் வெள்ள அபாய எச்சரிக்கை**

கர்நாடக மாநிலம் மைசூர் மாவட்டத்திலுள்ள கபினி அணையிலிருந்து விநாடிக்கு 35 ஆயிரம் கனஅடி வீதம் உபரி நீர் காவிரியில் திறந்துவிடப்படுகிறது. இதனால் காவிரியில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கன மழை காரணமாக காவிரி நீர்ப்பாசன அணைகளில் ஒன்றான கபினி அணை நிரம்பி வழிகிறது. கபினி அணையின் மொத்த உயரம் 2,284 அடி (கடல்மட்ட அளவு). அணையில் வெள்ளிக்கிழமை நீர்மட்டம் 2,282 அடியாக (கடல் மட்ட அளவு) இருந்தது. கேரள மாநிலம் வயநாட்டில் கனமழை பெய்து வருவதால் அணைக்கு நீர்வரத்து வெகுவாக அதிகரித்துள்ளது. அணையின் பாதுகாப்புக் கருதி அணைக்கு வரும் நீர் அப்படியே காவிரி ஆற்றில் திறந்துவிடப்படுகிறது. வெள்ளிக்கிழமை மாலை நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 40 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது.

அணையிலிருந்து விநாடிக்கு 35 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதனால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு

ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்லுமாறு நீர்ப்பாசனத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேபோல காவிரி நீர்ப்பாசன அணைகளுள் ஒன்றான மண்டியா மாவட்டம் கிருஷ்ணராஜ சாகர் (கே.ஆர்.எஸ்) அணையும் வேகமாக நிரம்பி வருகிறது. அணையின் மொத்த உயரம் 124.80 அடி. வெள்ளிக்கிழமை மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 99.40 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 44,972 கனஅடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கனமழை பெய்து வருவதாலும், ஹாரங்கி அணையிலிருந்து அதிக அளவில் தண்ணீர் திறந்து விடப்படுவதாலும் கே.ஆர்.எஸ். அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து விநாடிக்கு 1,557 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**நீர்மட்ட விவரம்:**

மைசூர் கேஆர்எஸ் அணை நீர்மட்டம்:

மொத்த உயரம்: 124.80 அடி

வெள்ளிக்கிழமை நீர்மட்டம்: 99.40 அடி

அணைக்கு நீர்வரத்து: 44,972 கன அடி

வெளியேற்றப்படும் நீர்: 1,557 கன அடி.

**கபினி அணை நீர்மட்டம்:**

மொத்த உயரம்: 2,284 அடி (கடல்மட்ட அளவு)

வெள்ளிக்கிழமை நீர்மட்டம்: 2282.00 அடி

அணைக்கு நீர்வரத்து:40,000 கன அடி

வெளியேற்றப்படும் நீர்: 35,000 கன அடி.

99. 40 அடியை எட்டியுள்ள கேஆர்எஸ் அணை

**மழைநீர் சேகரிப்பு காலத்தின் கட்டாயம்**

நீரின்றி அமையாது உலகு' என்பது பழமொழி. பூமி வெப்பம் அடைந்து வருவது, தட்பவெப்ப நிலை மாற்றம், பருவநிலை மாற்றம் போன்ற காரணங்களால் விவசாயத்தின் தேவைக்கு மட்டுமின்றி மனிதனின் அன்றாடத் தேவைக்குக் கூட தண்ணீர் கிடைப்பதில்லை.

முன்பு நகர்ப்பகுதிகளில் நிலவிய தண்ணீர் பற்றாக்குறை தற்போது கிராமப்புறங்களுக்கும் பரவி வறட்சி நிலை காணப்படுகிறது. இதனால், தண்ணீருக்காகப் பிற மாநிலங்களிடம் கையேந்தி நிற்கும் நிலைக்குத் தமிழகம் தள்ளப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் மன்னர்கள் ஏரி, குளம், அணைகள், தடுப்பணைகள் உள்ளிட்டவற்றை உருவாக்கி நீர்வளத்தைப் பெருக்கினர்.

தற்போது ஏரி, குளம், கால்வாய், நீர் நிலைகள், நீர் வழித்தடங்கள் உள்ளிட்டவற்றை அழித்துக் கட்டடங்களை எழுப்பி வருவதால் நிலத்தடி நீர்மட்டத்தின் அளவும் அதிக அளவில் குறைந்து வருகிறது.

தமிழகத்தில் சராசரியாக ஆண்டுக்கு 998 மில்லி மீட்டர் அளவு மழை பதிவாகி வருகிறது. இந்த வரிசையில் தமிழகத்துடன் இணைந்து 8 மாநிலங்களில் சராசரியாக 1,000 மில்லி மீட்டருக்கும் குறைவாகவே மழை பதிவாகிறது. ஆனால், பிற மாநிலங்களைவிட தமிழகம்தான் அதிக அளவில் தண்ணீர் பிரச்னையைச் சந்தித்து வருகிறது.

தமிழகத்தில் 10 அடி முதல் 60 அடி வரையில் கிடைத்து வந்த நிலத்தடி நீர், தற்போது 100 அடியில் இருந்து 500 அடிக்குக் கீழாகத்தான் கிடைக்கிறது.

இன்னும் சில பகுதிகளில் ஆயிரம் அடி வரை செல்கிறது. இதுதவிர கிணறுகளில் உள்ள நீர்மட்ட அளவு சராசரியாக ஒரு மீட்டர் அளவுக்கு மேல் குறைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மக்கள்தொகையும், நாளுக்குநாள் பயன்படுத்தப்படும் நீரின் அளவும் அதிகரித்து வருவதால் இயந்திரங்களைக் கொண்டு நிலத்தடி நீர் அதிக அளவில் உறிஞ்சப்படுகிறது. இதனால், குடிநீரை விலைக்கு வாங்கிப் பருகும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

பிற மாவட்டங்களைவிட சேலம், ஈரோடு, திருப்பூர், தஞ்சாவூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், கரூர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டத்தின் அளவு "அபாய நிலை'யில் உள்ளது. ஒரு சில மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் கிணறு வெட்டுவதற்குக் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற பிரச்னைகளுக்குத் தீர்வுகாண தமிழக அரசு கடந்த 2003-ஆம் ஆண்டில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தை வீடுகள், வணிக வளாகங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள், மருத்துவமனை, தொழிற்சாலை உள்பட ஆயிரம் சதுர அடி பரப்பளவுக்கு மேல் உள்ள கட்டடங்களில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைக் கட்டாயம் செயல்படுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

இந்தத் திட்டத்தை மாநிலம் முழுவதும் தீவிரப்படுத்தும் வகையில் திட்டத்தைச் செயல்படுத்தாத கட்டடங்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டது. இதுதவிர புதிதாக கட்டப்படும் கட்டடங்களின் வரைபடத்தில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின் விவரம் இடம்பெற்றிருந்தால் மட்டுமே கட்டட அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, நிலத்தடி நீர் மட்டத்தின் அளவு அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால், நாளடைவில் இந்தத் திட்டத்தின் பயன் குறித்து மக்கள், அதிகாரிகள் மத்தியில் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

மழை நீரின் அவசியத்தை மக்கள் புரிந்து கொள்ளாத காரணத்தால் வீடுகள், பிற கட்டடங்களில் அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை முறையாகப் பராமரிக்கத் தவறிவிட்டனர்.

காலத்தின் அவசியத்தைப் புரிந்துகொண்டு தற்போது மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை மக்கள் இயக்கமாக உருவாக்க வேண்டும் என தமிழக அரசு உத்தரவிட்டுச் செயல்படுத்த முயற்சித்து வருகிறது. மழைநீரின் தேவை, நிலத்தடி நீர்மட்டத்தின் அவசியத்தைப் புரிந்து கொண்டு அரசுடன் இணைந்து மக்களும் செயல்பட்டால் மட்டுமே எதிர்காலத் தண்ணீர் தேவையை நிறைவுசெய்ய முடியும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**06.07.2013**

## வறட்சி நிவாரணம் வழங்கவில்லை எலுமிச்சை விவசாயிகள் ஏமாற்றம்

திண்டுக்கல்:சிறுமலையில், எலுமிச்சை விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்காததால் ஏமாற்றமடைந்துள்ளனர்.சிறுமலையில் கடந்த 30 ஆண்டுகளாக எலுமிச்சை 10 ஆயிரம் ஏக்கரில் விளைவிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளில் 85 சதவிகிதத்தினர் எலுமிச்சையை நம்பி வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இது தவிர காப்பி, வாழை, தென்னை போன்றவை 2 ஆயிரத்து 500 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால், வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது.இதன்படி, சிறுமலையில், காபி பயிர் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கு மட்டும் அரசு நிதி ஒதுக்கீடு செய்திருந்தது.காபி பயிர் செய்த 355 பேர் வறட்சி நிவாரணம் பெற்றிருந்தனர். ஆனால், எலுமிச்சை விவசாயிகள் ஒருவருக்கு கூட வறட்சி நிவாரண நிதி வழங்கப்படவில்லை.சிறுமலை விவசாயி என்.நாகலிங்கம் கூறுகையில்,""கடந்த 30 ஆண்டுகளில் முதல்முறையாக எலுமிச்சை செடிகள் பட்டுபோயுள்ளன. இனிமேல் மழைபெய்யும் போது புதிய நாற்றுகளை நட்டாலும், ஆறு ஆண்டுகளுக்கு பின்புதான் பலனை எதிர்பார்க்க முடியும். வறட்சி நிவாரணம் வழங்காதது ஏமாற்றம் தருகிறது,'' என்றார்.தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் சந்திரசேகரன் கூறுகையில்,""கிராம நிர்வாக அலுவலர், தாசில்தார் அளித்த அறிக்கையின் அடிப்படையில்தான் ஆய்வு நடத்தினோம். எலுமிச்சை பாதிக்கப்பட்டிருப்பது குறித்து எங்களுக்கு எந்த தகவலும் தெரிவிக்கவில்லை,'' என்றார்.கலெக்டர் வெங்கடாசலம் கூறுகையில்,""அலுவலர்கள் ஆய்வு நடத்தியபோது எலுமிச்சை செடிகள் நன்றாக இருந்தன. அதன் பின் மழை

இல்லாமல் பட்டுபோயுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகள், தாசில்தாரிடம் மனு தரலாம். மத்திய அரசு அளிக்கும் நிவாரண நிதியிலிருந்து இவர்களுக்கு இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்யப்படும்," என்றார்.

## "வற செவட்டை' தாக்கியதால் திராட்சையில் மகசூல் பாதிப்பு

கம்பம்:திராட்சையில் "வற செவட்டை' தாக்கியதால், மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. விலையும் குறைந்திருப்ப,து விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

கம்பம் பள்ளத்தாக்கில், பல்லாயிரம் ஏக்கரில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. ஏற்றுமதி ரகம், ஒயின் தயாரிப்பிற்கு ஏற்ற ரகங்களை சாகுபடி செய்ய விவசாயிகள் முழுவீச்சில் களம் இறங்கியுள்ளனர்.இருந்த போதும், தற்போது பெய்து வரும் மழையால், பழங்கள் வெடித்து சிதறுகிறது. இதனிடையே கடந்த சித்திரை மாதம் கடும் வெப்பத்தில் "வற செவட்டை' தாக்கியது. இப்போது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வற செவட்டை என்பது வறட்சியான கோடைகாலங்களில், பூக்களில் தாக்கும். அப்போது ஒன்றும் தெரியாது. பழம் பழுக்க ஆரம்பிக்கும் போது தான் வேலையை காட்டும். இதனால் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. திராட்சை விவசாயிகள் சங்க பொருளாளர் இருளாண்டி கூறியதாவது: ஏக்கருக்கு 10 டன் வரை மகசூல் கிடைக்கும். வறசெவட்டையால், ஏக்கருக்கு 4 முதல் 5 டன் வரை மட்டுமே மகசூல் கிடைத்துள்ளது. விலையும் கிலோவிற்கு ரூ. 25 முதல் 30 வரை கிடைக்கிறது. ரம்ஜான் வருவதால் நல்ல விலை கிடைக்கும், என்று விவசாயிகள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர், என்றார்.

## விசாயிகள் அலைக்கழிப்பு

வருஷநாடு:கடமலைக்குண்டு தோட்டக்கலைத்துறையினர்,வி வசாயிகளுக்கு மானிய திட்டங்கள் வழங்காமல் அலைக்கழித்து வருகின்றனர்.

கடமலை-மயிலை ஒன்றியத்தில், 250க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளன. தென்னை, வாழை, முருங்கை,

வெங்காயம்,கொட்டைமுந்திரி,மக்காச்சோளம் உட்பட பல்வேறு விவசாயம் செய்கின்றனர். விவசாயிகள் தோட்டக்கலைத்துறை மூலம் மானிய உதவி கேட்டு மனு கொடுத்தாலும் அவர்களுக்கு முறையாக வழங்கப்படுவதில்லை. அப்படியே மானியம் கேட்டு வந்தால், நாளை வாருங்கள்?, அடுத்த நாள் வாருங்கள் என அதிகாரிகள் அலைக்கழித்து வருகின்றனர். இதனால், இந்தப் பகுதி விவசாயிகள் அரசின் மானியம் கிடைக்காமல் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

## நெல் சாகுபடிக்கு முன் காப்பீடுத்தொகை ராமநாதபுரம் விவசாயிகள் எதிர்பார்ப்பு

சாயல்குடி:விவசாயக்காலம் துவங்கும் முன் பயிர் காப்பீடு வழங்கப்படுமா என விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

கடலாடி, சிக்கல், சாயல்குடி, கமுதி, முதுகுளத்தூர் பகுதி விவசாயிகள் செப்டம்பரில் நெல் பயிர் சாகுபடி துவக்குவது வழக்கம். கடந்தாண்டு பயிரிட்டதில், பெரும்பாலான பகுதிகளில் பிடி சாவிகூட கிடைக்கவில்லை. ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டனர். வைக்கோல் கூட இல்லாமல், மாடுகளை விற்பனை செய்தனர். விவசாயிகளின் பரிதாப நிலை கருதி, அரசு வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு 5,000 ரூபாய் வழங்கியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அடுத்து நெல் பயிரிடும் காலம் இரண்டு மாதங்களில் துவங்கிவிடும். அதற்கான ஆயத்த பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கு முன்னதாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்காமல் இருக்கும், பயிர் காப்பீடுத்தொகையை வழங்க வேண்டும். இதன் மூலம், விவசாயிகள் கந்து வட்டிக்காரர்களிடம் சிக்கி தவிக்கும் அவலம் தடுக்கப்படும். எனவே, பயிர் காப்பீடு கிடைக்குமா? என விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""பயிர் காப்பீடுத்தொகை கண்டிப்பாக வழங்கப்படும்," என்றார்.

### பன்றி வளர்க்க மானியத்தில் கூடாரம்

காரைக்குடி:இறைச்சி உற்பத்தியில் பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்புக்கு அடுத்தபடியாக உள்ளது. ஊட்டச்சத்தை உறுதி செய்ய வெண் பன்றி வளர்ப்பை ஊக்கப்படுத்த, கால்நடை பண்ணைகள் அமைக்க கால்நடை துறை தீவிரம் காட்டி வருகிறது. கால்நடைத்துறை அதிகாரி கூறும்போது: செட்டிநாடு கால்நடை பண்ணையில், பன்றி வளர்ப்பை ஊக்குவிக்க,தசிய புரதச்சத்து மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.1.78 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பன்றிகளை உற்பத்தி செய்வதற்காக, ஆறு வளர்ப்பு கூடாரங்கள் அமைக்கப்படுகின்றன.சிவகங்கை மாவட்டத்தில் 10 ஒன்றியங்களில், 10 பெண் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களில் தலா ஒருவருக்கு, 5 பெண் குட்டி, ஒரு ஆண் குட்டி, மற்றும் 3 சென்ட் அளவில், பன்றி வளர்ப்புக்கான கூடாரம் 100 சதவீத மானியத்தில் அமைத்து கொடுக்கப்படும், என்றார்.

### நுண்நீர் பாசன திட்டவிழிப்புணர்வு முகாம்

தென்காசி:தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் நுண்நீர் பாசன திட்டம் தொடர்பாக தென்காசி வட்டம் கணக்கப்பிள்ளைவலசையில் விவசாயிகளிடம் விழிப்புணர்வு முகாம் நடந்தது.முகாமிற்கு கணக்கப்பிள்ளைவலசை ஊராட்சிமன்ற தலைவர் புன்னைவனம் தலைமை வகித்தார். தென்காசி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் திரவியம் முன்னிலை வகித்து பேசும்போது நுண்நீர் பாசனதிட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நூறு சதவீதம் மானியம் வழங்கப்படுவதாகவும்,பெரிய விவசாயிகளுக்கு எழுபத்து ஐந்து சதவீதம் மானியம் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார். சிறு மற்றும் குறு விவசாயிகள் அதற்குரிய சான்றை சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகத்தில் பெறவேண்டும். இவை தவிர நிலம் தொடர்பான 10-1 அடங்கல்,நிலத்தின் வரைபடம், பாஸ்போர்ட் அளவுள்ள இரண்டு புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் வேளாண்மை விரிவாக்க மையத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்து முற்றிலும் இலவசமாக சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்பாசனம் அமைத்து பயன்பெறுமாறு தெரிவித்துள்ளார் பெரிய விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ஒரு

குடும்பத்திற்கு பனிரெண்டரை ஏக்கர் வரை 75 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைத்து கொள்ளலாம் என கூறியுள்ளார்.

## கெலவரப்பள்ளி அணை நீர் வரத்து திடீர் சரிவு

ஓசூர்: தென்பெண்ணை ஆற்றில் நீர் வரத்து குறைந்ததால், ஓசூர் கெலவரப்பள்ளி அணை நீர் மட்டம் குறைந்தது.ஓசூர் அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கெலவரப்பள்ளி அணை நீர் மட்டம், 44 அடி ஆகும். இந்த அணைக்கு கர்நாடகா மாநிலம் "நந்திஹில்ஸ்' மலையில் உற்பத்தியாகும் தென்பெண்ணை ஆறு மூலம் தண்ணீர் வருகிறது. கடந்த இரு மாதமாக கர்நாடகா நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால் தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.இதனால், கெலவரப்பள்ளி அணைக்கு, 1,000 கன அடிக்கு மேல் தண்ணீர் வந்தது. அணை நிரம்பியதால், கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால், கே.ஆர்.பி., அணை நீர் மட்டம் உயர்ந்தது.கடந்த இரு வாரமாக தென்பெண்ணை ஆற்றில் நீர் வரத்து குறைந்ததால், கெலவரப்பள்ளி அணை நீர் மட்டம் "கிடுகிடு'வென வீழ்ச்சியடைந்து வருகிறது. தற்போது, கர்நாடகாவில் இருந்து தென்பெண்ணை ஆற்றில், 360 கன அடி தண்ணீர் மட்டுமே வருகிறது.இந்த தண்ணீர் முழுவதும் கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணைக்கு திறந்து விடப்படுகிறது. அதனால், கெலவரப்பள்ளி அணை நீர் மட்டம் தற்போது, 36 அடியாக வீழ்ச்சியடைந்துள்ளது.இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், ""கெலவரப்பள்ளி அணை நீர் மட்டம் வீழ்ச்சியடையவில்லை. அணை நீர் மட்டத்தை குறைந்துதான் வைத்துள்ளோம். கர்நாடகாவில் இருந்து எப்போது வேண்டுமென்றாலும் கூடுதல் நீர் வரத்து அபாயம் உள்ளதால், கெலவரப்பள்ளி அணை நிரம்பி விடும். அந்த எண்ணத்தில்தான், கே.ஆர்.பி., அணைக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. விவசாயிகள் அச்சப்படதேவையில்லை. கண்டிப்பாக நடப்பாண்டு பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் திறந்து விடப்படும், " என்றனர்.

### விவசாயிகள் சங்கபொதுக்கூட்டம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில், கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடந்தது.கிருஷ்ணகிரி - சேலம் சாலையில்உள்ள எல்.ஐ.சி., அலுவலகம் முன்பிருந்து பேரணி துவங்கியது. சப் - ஜெயில் ரோடு, பெங்களூரு ரோடு உள்ளிட்ட நகரின் முக்கிய சாலைககள் வழியாக பேரணி ரவுண்டானாவில் முடிந்தது.

தொடர்ந்து பொதுக்கட்டம் நடந்தது. மாநில தலைவர் சிவசாமி, தலைமை வகித்து பேசினார். பொதுச்செயலாளர் ராமகவுண்டர் வரவேற்றார். மாநில பொருளாளர் ராமசாமி கவுண்டர், கர்நாடகா மாநில செயலாளர் புட்டன்ணா, ஆந்திரா மாநில தலைவர் செங்கால் ரெட்டி ஆகியோர் பேசினர்."தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தை விவசாயத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும், தமிழகத்தில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்து பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள நிவாரணத்தை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும். மத்திய அரசு அறிவித்த ஏக்கருக்கு, 5 ஆயிரம் ரூபாய், மாநில அரசு அறிவித்த, 5 ஆயிரம் ரூபாய் மொத்தம் 10 ஆயிரம் ரூபாயை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். வாழை சேதத்திற்கு ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். யானை உள்ளிட்ட வன விலங்கள் சேதம் செய்த பயிர்களுக்கு ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். விவசாய வங்கி கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

### விவசாய மின் இணைப்பில் கரும்பு அரவைமின்வாரிய விதிமுறை குறித்து விளக்கம்

கோபிசெட்டிபாளையம்: சொந்த நிலத்தில் விளைந்த கரும்பை அரவை செய்வதற்கு மட்டும், விவசாய மின் இணைப்பில் இருந்து மின்சாரத்தை பயன்படுத்தி கொள்ளலாம், என மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.ஈரோடு மாவட்டத்தில் கரு ம்பு விவசாயிகள், தாங்களாகவே சொந்தமாக ஆலை அமைத்து, கரும்பு அரவை செய்து நாட்டுச்சர்க்கரை, வெல்லம் தயாரிக்கின்றனர். கடந்த நான்கு

ஆண்டுகளுக்கு முன்பு வரை, சொந்த நிலத்தில் விளையும் கரும்பை அரவை செய்ய விதிமுறைகளுக்கு உட்பட்டு, கிணற்று மின் இணைப்பு உள்ளவர்கள், மின்வாரிய அனுமதி பெற்று, மின் மோட்டார் மூலம் கரும்பை அரவை செய்தனர். நான்கு ஆண்டுகளாக மின்சார வாரியம் சரியான விதிமுறைப்படி அனுமதி வழங்காததால், ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். உரிய விதிமுறைப்படி அனுமதி வழங்கக்கோரி, விவசாய அமைப்புகள் மின்வாரியத்துக்கு கோரிக்கை வைத்தனர்.மின்வாரிய அதிகாரிகளின் சோதனையின்போது, விவசாய இணைப்பில், சொந்த கரும்பை அரவை செய்வதை கண்டுபிடித்தால், பல ஆயிரம் ரூபாய் அபராமதம் விதித்தனர். இதனால், பல விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இதனால், ஆயில் இன்ஜின் மூல ம் கரும்பை அரவை செய்தனர்.
கரும்பு விவசாயிகள் பாதிப்பை தடுக்க, தடப்பள்ளி பாசன நீர் பராமரிப்பு சங்கம் சார்பில் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் மனு செய்யப்பட்டது. இம்மனுவுக்கு பதிலளித்த மின்வாரிய தலைமை அலுவலகம், சொந்த வயலில் விளைந்த கரும்பை அரவை செய்வது, விவசாயத்தின் சார்பு செயல் மின் இணைப்பு மூலம், கட்டணம் ஏதுமின்றி பயன்படுத்தி கொள்ளலாம், என தகவல் தெரிவித்துள்ளனர்.மாவட்ட உழவர் விவாத குழு செயலாளர் வெங்கடாசலபதி, தடப்பள்ளி பாசன நீர் பராமரிப்பு சங்க செயலாளர் பிரபாகரன் ஆகியோர் கூறியதாவது:தகவல் அறியும் உரிமை சட்டப்படி பெறப்பட்ட கடிதத்தை, கலெக்டர் மற்றும் மின் நகரிய செயற்பொறியாளரிடம், உரிய அனுமதியை விதிமுறைகளுக்கு உட்பட்டு வழங்குமாறு கோரிக் கை வைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, சொந்த நிலத்தில் வி ளைந்த கரும்பை அரவை செய்வதற்கு மட்டும், விவசாய மின் இணைப்பில் இருந்து மின்சாரத் தை பயன்படுத்தி கொள்ளலாம்."சேஞ்ச் ஓவர் சுவிட்ச்' அமைத்து, அதன் மூலம் கரும்பு அரவை செய்ய வேண்டும். ஒரே நேரத்தில் கரும்பு அரவை மற்றும் கிணற்று நீரை பயன்படுத்த கூடாது. விவசாயத்துக்காக ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட மின் பளுவுக்கு சமமாக, அரவைக்குரிய மின்மோட்டாரை பயன்படுத்த வேண்டும். சொந்த கரும்பு அரவை செய்ய விரும்பு ம் விவசாயிகள், சம்பந்தப்பட்ட உதவி மற்றும் இளநிலை மின்துறை பெ ொறியாளரிடம் உரிய விண்ணப்பத்தை அளித்து, மின் இணை ப்பை பெற்றுக் கொள்ளலாம்.இந்த

விதிமுறைகளை பின்பற்றி, சொந்த நிலங்களில் விளையும் கரும்பை அரவை செய்து, கரும்பு விவசாயிகள் பயன்பெறலாம், என்றனர்.

### காந்தி மார்க்கெட்டில்காய்கறி விலை நிலவரம்

திருச்சி: திருச்சி காந்தி மார்க்கெட்டில் தங்கம் விலை போல, காய்கறிகளின் விலையும் நாளுக்கு நாள் உயர்ந்தும், சரிந்தும் வருகிறது.இந்த வார காய்கறி விலையில், தக்காளி, வெங்காயம், வெண்டை போன்ற சில காய்கறிகளின் விலை சரிவை தவிர, வேறு எந்த விலை மாற்றமும் இல்லை.காய்கறிகளில், கடந்த வாரத்தை ஒப்பிடுகையில், தக்காளி(ரூ.40 ), கிலோ ஒன்றுக்கு 10 ரூபாய் குறைந்து 30 ரூபாயாகவும், சின்ன வெங்காயம் (60 ரூபாய்) கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய் குறைந்து, 45 ரூபாயாகவும் விற்கப்படுகிறது.இதேபோல், வெண்டை (ரூ.25) தற்போது 5 ரூபாய் குறைந்து, 20 ரூபாயாகவும், பச்சைமிளகாய் (ரூ.40) கிலோ ஒன்றுக்கு 10 ரூபாய் குறைந்து, 30 ரூபாயாகவும் விற்கப்படுகிறது.மற்றபடி, மற்ற காய்கறிகள் கடந்த வார விலையிலே விற்கப்படுகிறது. இதில், கடந்த வாரத்தை விட, சில காய்கறிகளின் விலை சற்று அதிகரித்துள்ளது.பெரிய வெங்காயம் (ரூ.22) கிலோ ஒன்றுக்கு 4 ரூபாய் அதிகரித்து, 26 ரூபாயாகவும், மாங்காய் (ரூ.12) கிலோ ஒன்றுக்கு 8 ரூபாய் அதிகரித்து 20 ரூபாயாகவும், கொத்தவரங்காய் (ரூ.20) கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் அதிகரித்து 25 ரூபாயாகவும் விற்கப்படுகிறது.

### வாய்க்காலை தூர்வாரவிவசாயிகள் கோரிக்கை

க.பரமத்தி: "நொய்யல் ஆத்துப்பாளையம் அணை வாய்க்காலை தூர்வார, பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.நொய்யல் ஆத்துப்பாசன அணை கடந்த, 1985ம் ஆண்டு கார்வழி பஞ்சாயத்துக்குட்பட்ட அத்தப்ப கவுண்டன்வலசில், 160 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டது. இதன் மூலம், கரூர் மாவட்டத்தில் உள்ள, 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தது.கடந்த, 2000ம் ஆண்டுக்கு பின், திருப்பூர் சாயக்கழிவு நீரால் விவசாய நிலங்கள் நச்சுதன்மையாக மாறியது. இதனால், பாசன விவசாயிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தால், 2005ம் ஆண்டு முதல் சாயக்கழிவு நீர்

நிறுத்தப்பட்டது.பொதுப்பணித்துறையினர் கடந்தாண்டு அணையை ஆய்வு செய்து, திருப்பூர் மாவட்ட மலையத்தாபாளையம் கரையில் தேங்கிய மழைநீரை அணையில் சேமித்து, ஜூன் மாதம் ஒருபோக விளைச்சலுக்கு தண்ணீரை திறந்து விட்டனர்.

அப்போது, வாய்க்காலில் முட்புதர்கள் அதிகளவில் இருந்ததால், கடைமடை விவசாய நிலங்களுக்கு தண்ணீர் செல்லவில்லை. இதனால், விவசாயிகள் சாகுபடி செய்ய முடியாமல் பெரும் அவதிப்பட்டனர். தற்போது, தண்ணீர் திறந்து விடப்படும் சூழ்நிலை ஏற்பட்டால், முட்புதர்கள் அதிகம் உள்ள நிலையில், கடந்தாண்டு போல கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் செல்ல வாய்ப்பில்லை.எனவே, "நொய்யல் ஆத்துப்பாசன அணையின் வாய்க்காலை உடனடியாக தூர்வாரினால், தண்ணீர் திறக்கும் போது, விவசாய நிலங்கள் பயன்பெறும்' என, விவசாயிகள், பொதுப்பணித் துறையினருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உழவர் பாதுகாப்பு அட்டை முகாம்

உடையார்பாளையம்: உடையார்பாளையம் அருகே சுத்தமல்லி வருவாய் பஞ்சாயத்தில் உழவர் பாதுகாப்பு அட்டை முகாம் நடந்தது.முகாமிற்கு ஆர்.ஐ., ஆனந்த் தலைமை வகித்தார். முகாமில், உழவர் பாதுகாப்பு அட்டை கேட்டு 197 பேர், இயற்கை மரணம் உதவி கேட்டு எட்டு பேர், திருமண உதவித்தொகை கேட்டு 17 பேர் விபத்து நிவாரணம் கேட்டு இரண்டு பேர் என விண்ணப்பித்த 218 பேருக்கு தீர்வு காணப்பட்டது.முகாமில் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள் மற்றும் உதவியாளர்கள் கலந்துகொண்டனர்.

## வேளாண் மற்றும் பால் வளகண்காட்சி சேலத்தில் நடப்பு

சேலம்: சேலம் வேளாண் மற்றும் பால் வள கண்காட்சி, சேலம் தெய்வீகம் திருமண மண்டபத்தில் நடக்கிறது.ஜூலை, 8ம் தேதி வரை நடக்க உள்ள இக்கண்காட்சி, சேலம் வேளாண் பட்டதாரிகள் சேவை மற்றும் ஆலோசனை, சேலம் ஆவின், ஈரோடு கோன்டாக் நிறுவனம் இணைந்து நடத்துகிறது. கண்காட்சி துவக்க

விழாவில், வேளாண் பட்டதாரிகள் சங்கத்தலைவர் ஜெகதீசன், செயலாளர் ஜெனகன், பல்லவன் கிராம வங்கித்தலைவர் சுரேஷ்குமார், பொதுமேலாளர் ரகுநாதன், முதுநிலை மேலாளர் சங்கர்லால் ஆகியோர் கலந்து கொண்டனர்.கண்காட்சியில், பல்லவன் வங்கி சார்பில் நிறுவப்பட்ட அரங்கில், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் தயார் செய்யப்படும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. பல்லவன் கிராம வங்கியின் சேமிப்பு மற்றும் கடன் திட்டங்கள் குறித்த விளக்கம் மற்றும் ஆலோசனைகளும், பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டது.விழாவில், வங்கித்தலைவர் சுரேஷ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். ஜூலை, 6 மற்றும், 7ம் தேதியன்று, பல்லவன் வங்கியும், இந்திய ரிசர்வ் வங்கியும் இணைந்து, கள்ள நோட்டு விழிப்புணர்வு முகாமும், கிழிந்த மற்றும் அழுக்கடைந்த ரூபாய் நோட்டுகள் மாற்றும் முகாமும் நடைபெற உள்ளது.

## வறட்சி நிவாரணம்: ஆயிரத்துக்கு ரூ.50 கமிஷன் நாலூர் கிராம விவசாயிகள் புகார்

நரிக்குடி:வறட்சி நிவாரண உதவி தொகையில் ஆயிரத்துக்கு 50 ரூபாய் கமிஷன் கேட்பதாக,நாலூர் கிராம விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.விவசாயம் பாதிக்கப்பட்ட நிலையில், அனைத்து விவசாயிகளுக்கும், வறட்சி நிவாரண தொகை வழங்க, தமிழக அரசுஉத்தரவிட்டுள்ளது. அதன்படி, கூட்டுறவு வங்கிகள் மூலமாக, வறட்சி நிவாரண தொகை வழங்கப்படுகிறது. உளுத்திமடையில் செயல்படும் நாலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில், விவசாயிகளின் அனுமதியின்றி, ஆயிரம் ரூபாய்க்கு 50 ரூபாய் கமிஷன் எடுக்கப்படுகிறது என, நாலூர் கிராம விவசாயிகள் புகார் தெரிவித்தனர். மேலும், வறட்சி நிவாரண பயனாளிகளின் பட்டியலை, பொது மக்கள் பார்வைக்கு வைக்காமல், தகவல் தெரிவிக்க மறுக்கின்றனர் எனவும், புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.நாலூர் கருப்பசாமி,"" உ விவசாயம் பொய்த்துப் போன நிலையில், அரசு வழங்கும் உதவி தொகை ஓரளவு ஆறுதலாக உள்ளது. அந்தப் பணம் முழுமையாக கிடைக்கவில்லை. பயனாளிகளின் பட்டியலை பார்வைக்கு வைக்காமல், தாங்களே வைத்துக் கொள்கின்றனர். இதனால் உதவி தொகை வந்துள்ளதா எனத் தெரியாமல், விவசாயிகள் தினமும் அலைகின்றனர்,"என்றார்.கடுக்காய்குளம் பூமி,

""எனக்கு, வறட்சி நிவாரண உதவி தொகையாக 13 ஆயிரத்து 850 ரூபாய் வந்துள்ளது. ஆனால் 13 ஆயிரம் மட்டும்தான் வழங்கினர். மீதி 850 ரூபாய் தரவில்லை. அதுபற்றி கேட்டால், அப்படித்தான் எனக் கூறுகின்றனர்,"என்றார். கூட்டுறவு வங்கி செயலாளர் பாலமுருகன்,"" விவசாயிகளிடம் பணம் வாங்கவில்லை. வெளியில் வாங்கினால், அதற்கு நாங்கள் பொறுப்பில்லை. பயனாளிகள் பட்டியலில் தவறான தகவல் உள்ளது. உதாரணமாக, ஒருவர் பெயரில் உள்ள சொத்துக்கு, மற்றொருவர் பெயருக்கு பணம் வந்துள்ளது. இந்தக் குழப்பத்தினை தவிர்க்கவே, பட்டியலை நாங்களே சரி பார்க்கிறோம். சரி செய்தவுடன் ,மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்," என்றார்.

### நிலக்கடலை உற்பத்தி 5 லட்சம் டன்னாக உயரும்

நிலக்கடலை பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளதால், அதன் உற்பத்தி, 5 லட்சம் டன்னாக உயரும் என, மதிப் பிடப்பட்டு உள்ளது.முன்கூட்டிய பருவமழையால், நடப்பு கரீப் பருவத்தில் (மே-ஆக.,), நிலக்கடலை பயிரிடும் பரப்பளவு, கடந்த ஆண்டின் இதே காலத்தை விட, 16.75 லட்சம் ஹெக்டேர் அதிகரித்துள்ளது. **குஜராத்:**பொதுவாக, நாடு முழுவதும், கோடையில், 49 லட்சம் ஹெக்டேர் பரப்பில் நிலக்கடலை பயிரிடப்படும். நிலக்கடலை உற்பத்தியில் முன்னணியில் உள்ள குஜராத்தில், நல்ல அளவில் மழை பெய்துள்ளது.இதனால், நடப்பு ஜூலை 1ம் தேதி நிலவரப்படி, குஜராத்தில், நிலக்கடலை பயிரிடும் பரப்பளவு, 14.10 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டு, இதே காலத்தில் 2.20 லட்சம் ஹெக்டேராக இருந்தது.இதையடுத்து, நடப் பாண்டு கோடையில், குஜராத்தின் நிலக்கடலை உற்பத்தி, 1 லட்சம் டன்னாக உயரும் என, மதிப்பிடப் பட்டுள் ளது. இது நாட்டின் ஒட்டுமொத்த நிலக்கடலை உற்பத்தி உயர வழி வகுத்துள்ளது. **ஏற்றுமதி:**கோடையில் உற்பத்தியாகும் நிலக்கடலை பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப் படுவது வழக்கம். இந் நிலையில், சர்வதேச மந்தநிலையால், நிலக்கடலை ஏற்றுமதி குறைந்துள்ளது.இதனால், உள்நாட்டில் நிலக்கடலை விலை சரிவடைந்துள்ளது.குஜராத் மொத்த விற்பனை சந்தைக்கு, நாளொன்றுக்கு,45 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மூட்டை நிலக்கடலை வருகிறது. இதில், 60 சதவீதம்,

ராஜஸ்தான், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங் களில் இருந்து வரத்தாகிறது. அதிக வரத்து காரணமாக, கடந்த ஜூன் மாதம், 20 கிலோ கொண்ட நிலக்கடலை மூட்டையின் விலை, 275 ரூபாய் குறைந்து, 1,090 - 1,100 ரூபாயில் இருந்து, 700 -840 ரூபாய் என்ற அளவில் குறைந்துள்ளது.

- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**06.07.2013**

## 1கிலோ தக்காளி 100 ரூபாய் நாடு முழுவதும் காய்கறி விலை கிடுகிடுவென உயர்வு



நாடு முழுவதும் காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தலைநகர் டெல்லியில் 4 மடங்கு உயர்ந்துள்ள காய்கறிகளின் விலையால் மார்க்கெட் செல்வதற்கே மக்கள் தயக்கம் காட்டுகின்றனர். 1 கிலோ தக்காளி 100 ரூபாய்க்கும், 1 கிலோ கத்திரிக்காய் 80 ரூபாய்க்கும், 1 கிலோ கொத்தமல்லி 150 ரூபாய்க்கும் விற்கப்படுவதாக சில்லரை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு உள்ளிட்ட அனைத்து காய்கறிகளின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளதால் ஏழை மக்களுக்கு காய்கறி கூட எட்டா கனி ஆகிறது. மும்பை, ஐதராபாத், ஜெய்ப்பூர், கல்கட்டா, பாட்னா உட்பட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. குறிப்பாக ஜம்மு, காஷ்மீரில் விலை உயர்வு காரணமாக காய்கறி விற்பனை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

காய்கறிகளின் விலை உயர்வை அடுத்து மும்பையில் 30% தள்ளுபடி விற்பனையில் காய்கறி விற்பனை தொடங்க மகாராஷ்டிரா அரசு முடிவு

செய்துள்ளது. வட மாநிலங்களில் பெய்த மோசமான மழையால் வரத்து குறைந்ததை விலை உயர்வுக்கு காரணம் என சில்லரை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் வரத்து குறைவை காரணம் காட்டி சில்லரை வியாபாரிகள் மிக கடுமையாக விலையை உயர்த்தி விற்பதாக மொத்த வியாபாரிகள் கூறுகின்றனர். ஏற்கனவே பண வீக்கம் காரணமாக அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்ந்துள்ள நிலையில் காய்கறிகளின் விலையும் கடுமையாக உயர்ந்திருப்பதால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் செய்வதரியாது தவிக்கின்றனர். விலை உயர்வை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைத்து தரப்பு மக்களின் கோரிக்கையாக உள்ளது.

### உள்நாட்டு நிறுவனங்களை பாதுகாக்க  சர்க்கரை இறக்குமதி வரி 15 சதவீதமாக உயர்கிறது

மும்பை: சர்க்கரை இறக்குமதிக்கு தற்போது விதிக்கப்படும் 10% வரியை 15% ஆக உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் சர்க்கரை உற்பத்தி நிறுவனங்களின் பங்கு மதிப்பு நேற்று 5 சதவீதம் வரை உயர்ந்தது. சர்க்கரை இறக்குமதியால் உள்ளூரில் சர்க்கரை விலை குறைகிறது. ஆனால், இந்தியாவில் உள்ள ஆலைகள் விவசாயிகளுக்கு கரும்பு நிலுவை தொகையை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதை போக்க இறக்குமதி வரியை 15 சதவீதமாக உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் சக்தி சுகர்ஸ் நிறுவன பங்குகள் 4.32 சதவீதம் உயர்ந்தது. ஸ்ரீ ரேணுகா சுகர்ஸ், பஜாஜ் ஹிந்துஸ்தான், தம்பூர் சுகர்ஸ், பல்ராம்பூர் சின்னி மில்ஸ் உள்ளிட்ட சர்க்கரை உற்பத்தி நிறுவன பங்குகளும் உயர்ந்துள்ளன.

### கர்நாடகா அணைகளை திறந்து விடுவதால் : காவிரியில் வெள்ள அபாயம்

மைசூர்: கர்நாடகாவில் பெய்து வரும் கனமழை காரணமாக அணைகளை திறந்து விடுவதால், காவிரியில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காவிரியில் திறக்கப்பட்ட தண்ணீரால் மேட்டூர் நீர்மட்டம்

அதிகரித்து வருகிறது. கர்நாடகாவில் தென்மேற்கு பருவமழை ஜூலை மாத தொடக்கத்தில் இருந்தே தீவிரமடைந்துள்ளது. தென்கனரா மற்றும் குடகு மாவட்டங்களில் தொடந்து கனமழை கொட்டி வருகிறது. இதன் காரணமாக குடகு, மைசூர் மாவட்டங்களில் உள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. குறிப்பாக, மைசூர் மாவட்டத்தில் உள்ள கபினி அணைக்கு நீர்வரத்து அதிகரித்து முற்றிலுமாக நிரம்பியுள்ளது. இந்த அணையின் மொத்த கொள்ளளவு 2 ஆயிரத்து 284 அடி. நேற்றைய நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 42 ஆயிரத்து 380 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால், அணை முற்றிலுமாக நிரம்பி அபாய கட்டத்தை எட்டியுள்ளதால் அணையில் இருந்து வினாடிக்கு 48 ஆயிரத்து 830 கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணை நிரம்பியதால் முதல்வர் சித்தராமையா இன்று சமர்ப்பண பூஜை செய்ய உள்ளார். அதேபோல், குடகு மாவட்டத்தில் ஒரு வாரமாக பெய்து வரும் கனமழையால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மொத்த கொள்ளளவு 124.80 அடியாக உள்ள கே.ஆர்.எஸ். அணையின் தற்போதைய நீர் மட்டம் 97 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நேற்று பிற்பகல் நிலவரப்படி வினாடிக்கு 32 ஆயிரத்து 568 கனஅடி நீர் வந்து கொண்டுள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு ஆயிரத்து 557 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. ஹாரங்கி அணையின் மொத்த கொள்ளளவு 2 ஆயிரத்து 859 அடியாக உள்ளது. தற்போதைய நீர் மட்டம் 2 ஆயிரத்து 855.98 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு 9 ஆயிரத்து 633 கனஅடி நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து 15 ஆயிரத்து 650 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதால் காவிரியில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதே நேரம், கர்நாடகாவில் இருந்து வரும் தண்ணீர் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

### உணவு பாதுகாப்பு அவசர சட்டம் : ஜனாதிபதி கையெழுத்திட்டார்

புதுடெல்லி: மத்திய அரசின் உணவு பாதுகாப்பு அவசர சட்டத்தில், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று கையெழுத்திட்டார். ஏழை மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு 5 கிலோ அரிசி அல்லது கோதுமையை கிலோ ரூ.1 விலையில் வழங்க வகை செய்யும் உணவு பாதுகாப்பு மசோதாவை அவசர சட்டமாக கொண்டுவர மத்திய அமைச்சரவை 2 நாட்களுக்கு முன் ஒப்புதல் அளித்தது. இதற்கு பா.ஜ. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்னும் சில வாரங்களில் தொடங்க உள்ள நிலையில், அவசர சட்டத்துக்கு தேவை என்ன என பா.ஜ. கேள்வி எழுப்பியுள்ளது. ஏதாவது ஒரு பிரச்னையை முன்வைத்து தொடர்ந்து நாடாளுமன்றத்தை எதிர்க்கட்சிகள் முடக்கி வருவதால், அவசர சட்டமாக உணவு பாதுகாப்பு மசோதாவை அமல்படுத்த வேண்டிய கட்டாயத்துக்கு மத்திய அரசு தள்ளப்பட்டதாக காங்கிரஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே, இந்த அவசர சட்டம் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் கையெழுத்துக்காக நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டது. அதில் ஜனாதிபதி நேற்று கையெழுத்திட்டார்.

### மத்திய மாநில அரசுகள் ஒரு டன் கரும்புக்கு ஸி4500 வழங்க விவசாயிகள் கோரிக்கை

நாமக்கல்: நாமக்கல் மாவட்டம் மோகனூர் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின், பேரவைக்கூட்டம், நடந்தது. சங்க தலைவர் கந்தசாமி தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் வக்கீல் நடராஜன் ஆண்டறிக்கை வாசித்தார். கூட்டத்தில், மத்திய, மாநில அரசுகள், இந்த ஆண்டு கரும்பு அரவை பருவத்துக்கு, டன் ஒன்றுக்கு, ஸி4,500 விலை அறிவிக்க வேண்டும். கரும்பு வெட்டுக்கூலி, வாகன வாடகை முழுவதையும், ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டும். கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டு காய்ந்து கொண்டிருக்கும் கரும்பை, உடனடியாக முன்னுரிமை அடிப்படையில், ஆலை நிர்வாகம் வெட்டிக் கொள்ள வேண்டும். ஆலைக்கு பதிவு செய்யப்பட்ட கரும்பு பயிருக்கு, தேவையான

உரங்களை, ஆலை நிர்வாகமே, மானிய விலையில், விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

வறட்சியால், ஆலைக்கு பதிவு செய்யப்பட்ட கரும்பு பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவு கடன்களை, அசல், வட்டியுடன் தள்ளுபடி செய்யவும், கரும்பு பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு, ஸி 25 ஆயிரம் நிவாரணம் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கரும்பு பயிருக்கு, கூட்டுறவு வங்கியில், விவசாயிகளுக்கு வழங்கும் கடன் தொகையில், பயிர் இன்சூரன்சுக்கென, குறிப்பிட்ட சதவீதத் தொகை பிடித்தம் செய்யப்படுகிறது. ஆனால், எந்த விவசாயிக்கும், இதுவரை, பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இன்சூரன்ஸ் தொகை வழங்கவில்லை. இனிமேல், எந்த பயிர்க்கடன்களுக்கும், இன்சூரன்சுக்கென எவ்வித தொகையும், கூட்டுறவு வங்கிகள் பிடித்தம் செய்யக்கூடாது எனபது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பொருளாளர் ஸ்ரீதரன், துணைத் தலைவர்கள் எட்டிக்கன், ராமசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி**

வேப்பந்தட்டை, : பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டாபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) கதிரவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் பற்றி இலவச பயிற்சி வரும் 9 ம்தேதியும், வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பது குறித்த பயிற்சி 10ம்தேதியும் நடைபெற உள்ளது.  இதில் மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சியில் மண் புழு உரம் தயாரிக்கும் முறைகள், மண் புழுவின் வகைகள், மண்புழு குளியல் நீர் தயாரிக்கும் முறைகள், பண்ணை கழிவுகளை பயன்படுத்தி மண்புழு உரம் தயாரித்தல், மண்புழு உரத்தை சலித்து பிரிக்கும் முறை ஆகியன குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது.

வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பது குறித்த பயிற்சியில், தோட்டம் அமைக்கும் முறை, பராமரிப்பு மற்றும் பயன்கள், அதன் முக்கியத்துவம், பருவம் சார்ந்த

காய்கறி பயிர் தேர்வு ஆகியன குறித்து பயிற்சிகள் காணொளி காட்சி மூலமாகவும், செயல் விளக்கங்கள் மூலமாகவும் அளிக்கப்பட உள்ளது.

இதில் விவசாயிகள், பண்ணை மகளிர், கிராமப்புற இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம். இதில் பங்கேற்க விரும்புவோர் தங்களது பெயர் மற்றும் முகவரியை வேளாண் மையத்திற்கு நேரிலோ, 04328& 293592 என்ற அலுவலக எண்ணிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் சங்கத்திற்கு ரூ.1 லட்சம் நிதியளிப்பு**

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டத்தில் விவசாய சங்கத்திற்கு நிதியாக ரூ.1 லட்சம் வழங்கப்பட்டது.

அகில இந்திய விவசாய சங்கத்தின் 33வது மாநாடு வரும் 24, 27ல் கடலூரில் நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு ஜெயங்கொண்டத்தில் நிதியளிப்பு விழா மற்றும் கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது. விழாவிற்கு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் நாகரத்தினம் தலைமை வகித்தார். தா.பழூர் பழனிவேல், செந்துறை ஒன்றிய செயலாளர் கந்தசாமி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். ஜெயங்கொண்டம் ஒன்றிய செயலாளர் உத்திராபதி வரவேற்றார். மாநில துணைத்தலைவர் முகமதுஅலி, மாவட்ட செயலாளர்கள் மணிவேல், செல்லதுரை, அழகர்சாமி, துரைராஜ், துரைசாமி, மாவட்ட தலைவர் சவுரிராஜன், பொருளாளர் வெங்கடாசலம், வட்ட செயலாளர்கள் மகாராஜன், முத்துசாமி, மாதர் சங்கம் மீனா, பத்மாவதி, தமிழரசி உள்ளிட்டோர் பேசினர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினர் வரதராஜன் சிறப்புரையாற்றினார். பின்னர் சங்கத்தின் சார்பில் ரூ. 1 லட்சம் சங்க நிதியாக அளிக்கப்பட்டது. இறுதியில் மாவட்ட செயலாளர் இளங்கோவன் நன்றி கூறினார்.

**வாழை விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டம்**

குளித்தலை, : கரூர் மாவட்ட வேளாண் விற் பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் வாழை விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம்

கிராமிய கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு விவசாய சங்க தலைவர் கோபாலதேசிகன் தலைமை வகித்தார். கிரா மியம் இயக்குநர் டாக்டர் நாராயணன், ஊராட்சி தலைவர்கள் சின்னசாமி, தனலெட்சுமி முன்னிலை வகித்தனர்.

கரூர் வேளாண்மை வணிகத்துணை இயக்குநர் ரவி, தொழில்நுட்ப வல்லுநர் தனசேகரன், நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் பார்த்திபன், விவசாயிகள் உற்பத்தி நிறுவன தலைவர் கரிகாலன், வேளாண்மை அலுவலர் பிரபாகரன் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் ராஜேந்திரம் ஊராட்சி தலைவர் சின்னச்சாமி பேசுகையில், ராஜேந்திரம் ஊராட்சியில் தேசிய ஊரக வேலை திட்டத்தில் 1,400க்கும் மேற்பட்ட பெண்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது அவர்களுக்கு உரிய வேலை ஊராட்சியில் இருந்து கொடுக்க முடியாததால் சிரமப்படுகின்றனர்.

இதனை கருத்தில் கொண்டு வேளாண்மைத்துறையில் தேசிய ஊரக வேலை திட்ட பணியில் உள்ள பெண்களுக்கு விவசாயம் சார்ந்த பணிகள் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண வழங்க அதிகாரபூர்வமான தகவலை வேளாண்துறை வெளியிட வேண்டும். வாழைகன்றுக்கு மானியம் உண்டு என்பது இந்த கூட்டத்தில் தான் தெரிய வந்துள்ளது.

தண்ணீர்பள்ளியில் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் உள்ள தகவல் இதுநாள் வரை தெரியவில்லை. வேளாண் அதிகாரிகள் உள்ளூர் விவசாயிகளுக்கு கூட தெரிவிக் கவில்லை. இதற்கு அதிகாரிகளின் மெத்தன போக்கே காரணம் என குற்றம்சாட்டினார்.

**தூத்துக்குடி மாவட்ட கார் சாகுபடிக்கு பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும்**

தூத்துக்குடி, : மாவட்ட திமுக செயலாளர் கோரிக்கை

தூத்துக்குடி மாவட்டத்தில் கார் சாகுபடி பாபநாசம் அணையிலிருந்து உடனடியாக தண்ணீர் திறந்துவிடவேண்டும் என மாவட்ட திமுக செயலாளர் பெரிய சாமி,

தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் பெருவாரியாக நடைபெறும் நன் செய் விவசாயம் பாபநாசம், மணிமுத்தாறு அணைகளை நம்பியே நடந்து வருகிறது. இந்த ஆண்டு பிசான சாகுபடி மழை இல்லாமல் பொய்த்து போய்விட்டது. கார் சாகுபடியாவது நடக்குமா என்று கேள்விக்குறி எழுந்துள்ளது. தற்போது பாபநாசம் அணையில் 117 அடி தண்ணீர் இருந்தும் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

இதனால் தூத்துக்குடி மாவட்டத் தில் ஸ்ரீவை குண்டம் வடகால், தென் கால், மருதூர் மேலகால், கீழக்கால் என 4 கால்வாய் களை நம்பி 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள நெல் மற்றும் வாழை விவசாயம் செய்த விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திமுக ஆட்சியில் பாபநாசம் அணையில் 40 அடி தண்ணீர் இருந்த நேரத்திலும் விவசாயத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதை விவசாயிகள் மறந்திருக்க மாட்டார்கள். இப் போது அணை யில் 117 அடி தண்ணீர் இருந் தும், அணைக்கு 2500 கன அடி நீர்வரத்து இருந் தும் தூத்துக்குடி மாவட்டத்திற்கு மட்டும் 4 கால்வாய்களிலும் தண்ணீர் வராதது மர்மமாக உள்ளது.

இதற்கும் தமிழக முதல்வர்தான் உத்தரவிட வேண்டும் என்றால் மாவட்ட நிர்வாகம் முதலமைச்சருக்கு தெரியப்படுத்தி உடனடியாக தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திண்டிவனம் பகுதியில் தோட்டப்பயிர் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம்

திண்டிவனம்: திண்டிவனத்தில் இருந்து மரக்காணம் செல்லும் வழி யில் எண்டியூர் கிராமம் உள் ளது. இந்த கிராமத்தில் பெரும்பாலான விவசாயி கள் தோட்டப்பயிர்களை அதிக அளவில் பயிர் செய்து வருகின்றனர். காய்வகையான பாகற்காய், புடலங்காய், கோவக்காய், வெண்டைக்காய் போன்ற காய்களும், பூ வகையில் ரோஜாப்பூ, மல்லி, முல்லை என தோட்டப்பயிர்களை பயிர் செய்கின்றனர். பருவ மழை அளவு குறைந்துள்ள தால் தோட்டப்பயிர் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆறு மாத கால பயிரான புடலங் காய்

விதைத்த இரண்டு மாதங்கள் ஆன பிறகே அறு வடை செய்ய முடியும். ஆறு அடி அகலம், 4 அடி குழியில் சவுக்கு குச்சிகளை வைத்து அதில் நைலான் கயிறுகளை கட்டி பந்தல் அமைக்கின்றனர். பின்பு விதை விதைக்கப்படுகிறது. சொட்டு நீர் பாசனம் அல்லது கிணற்று தண்ணீர் இரைத்து கொடி வேர்களுக்கு தண்ணீர் விடுவ தால் மிக குறைந்த அளவே தண்ணீர் செலவு ஆகிறது. அவ்வப்போது வேர்களுக்கு மருந்து, உரம் வைத்து பராமரிக்க வேண் டும். இரண்டு மாதத்தில் கொடிகளில் பூ பூத்து காய் பிஞ்சு விடுகிறது. பிஞ்சு விட்ட ஏழு நாளில் காய் நன்றாக காய்த்து விடும். ஒவ்வொரு காயும் சுமார் 300, 400 கிராம் எடை இருக் கும். அவற்றை விவசாயிகள் திண்டிவனம், சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

ஒரு ஏக்கருக்கு சுமார் 500, 600 கிலோ வரை மக சூல் கிடைக்கிறது. தற் போது புடலங்காய் ஒரு கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை விலை போகிறது. இத னால் புடலங்காய் பயிரிட்டுள்ள விவசாயிகள் அதிக லாபம் பெறுகின்றனர்.

**மதிப்பூட்டப்பட்ட பால் பொருள் தயாரிக்க சுய உதவி குழுவுக்கு பயிற்சி**

துறையூர், : மதிப்பூட்டப்பட்ட பால் பொருள் தயாரிக்க சுய உதவிக்குழு பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

துறையூர் அடுத்த சேனப்பநல்லூரில் துறையூர் கிளை இந்தியன் வங்கி, நபார்டு வங்கி, சாலோ பவுண்டேசன் தொண்டு நிறுவனம் ஆகியவற்றின் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு கறவை மாடுகள் வளர்த்தல், பராமரித்தல், மதிப்பூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில் பங்கேற்று பயிற்சி பெற்றவர்களுக்கு நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் சுரேஷ்குமார் சான்றிதழ் வழங்கினார். கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆராய்ச்சி மையத்தின் டாக்டர் ராஜ ராஜன் பேசினார். இந்தியன் வங்கி மேலாளர் ரமேஷ்குமார், சலோம் பவுண்டே சன் பொறுப்பாளர் மாரி முத்து, கால்நடை மருத்துவர் தமிழரசி, ராமநாதன் கலந்துகொண்டனர். பால் கொள்முதலாளர் கோவிந்தசாமி நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**06.07.2013**

**ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2&வது சீசனுக்கு மலர்செடிகள் நடவு செய்யும் பணி 10&ந்தேதி தொடக்கம்**

ஊட்டி,

ஊட்டி அரசு தாவர வியல் பூங்காவில் 2-வது சீசனிற்காக மலர் செடிகள் நடவு செய்யும் பணி வருகிற 10-ந் தேதி தொடங்குகிறது.

கோடை சீசன்

நீலகிரி மாவட்டத்தில் ஏப் ரல், மே மாதத்தில் கோடை சீசனும், அக்டோபர், நவம்பர் மாதத்தில் 2-வது சீசனும் நடை பெறுகிறது. ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் கோடை சீசனிற்கு நடவு செய் யப்பட்ட மலர் செடிகள் தற் போது பெய்து வரும் மழை யால் சேதமடைந்து உள்ளது.

சேதமடைந்த இந்த மலர் செடிகளை அகற்றவும், பூங்கா வில் உள்ள நிலத்தை பண் படுத்தும் பணியிலும் ஊழி யர்கள் ஈடுபட்டு வருகின் றனர். தற்போது பெய்து வரும் மழை காரணமாக பூங்காவில் உள்ள புற்கள், அலங்கார செடிகள் வளர்ந்து உள்ளது. இந்த செடிகள் மற்றும் புற் களை வெட்டி அழகுபடுத் தும் பணி தீவிரப் படுத்தப்பட்டு உள்ளது.

7 ஆயிரம் பூந்தொட்டிகள்

கோடை சீசனிற்கு சுமார் 15 ஆயிரம் பூந்தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப் பட்டு இருந்தது. இந்த மலர் செடிகள் பூத்து ஓய்ந்து விட்ட தால், இந்த செடிகளை அகற்றி விட்டு, பூந்தொட்டி களை சுத்தம் செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகி றது.

2-வது சீசனிற்கு சுமார் 7 ஆயிரம் பூந்தொட்டிகளில் மலர்செடிகள் நடவு செய்ய பூங்கா நிர்வாகத்தினர் முடிவு செய்து உள்ளனர். இதற்காக பூங்காவில் உள்ள நர்சரியில் பிரஞ்மேரி கோல்டு, எக்ஸ் கல்சியா, கேலன் டூலா, டல் பினியம், ரெனன்குலஸ், பிகோ னியா, பேன்சி, சாமந்தி, பால் சம் உள்ளிட்ட பல்வேறு வகை யான மலர்செடி நாற்றுகள் தயார் நிலையில் உள்ளது.

10-ந்தேதி தொடக்கம்

2-வது சீசன் காலமான அக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் பூக்கள் பூக்கும் வகையில் மலர் செடிகள் நடவு செய்யப்பட உள்ளது. முதற் கட்டமாக மலர் செடிகளின் பூக்கும் காலத்தை கணக்கிட்டு வருகிற 10-ந்தேதி முதல் மலர் செடிகள் நடவு செய்யும் பணி பூங்காவில் தொடங்கப்பட உள்ளது.

இதற்கான பணிகளில் பூங்கா நிர்வாகத்தினர் மற்றும் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.